இன்னென்று, அமைதிக்குப் பங்கம் வரும் என்பதை எப்படித் தெரிந்துகொள்ள முடியும் என்று சொல்கிறேன். நம்முடைய உணவு அமைச்சர் திரு. மதியழகன் அவர்கள் திரிபுவனம் செல்கிற நேரத்தில் கருப்புக்கொடி காட்ட இருந்த காங்கிரஸ்காரர்களுக்கு நமது போலீசார் இடம் ஒதுக்கித் தந்து இன்ன இடத்தில் இருந்து காட்டுங்கள் என்று சொன்ஞர்கள். மற்ருெரு இடத்தில் அமைச்சருக்கு திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர்கள் வரவேற்புக் கொடுக்க இருந்தது. அந்த இடத்தில் இருந்துதான் கருப்புக்கொடி காட்டுவோம் என்ற காரணத்திஞல் அவர்களை அப்புறப்படுத்தி கைது செய்து மாலையில் விடுதலை செய்தார்கள்.

திரு. கே. என். குமாரசாமி : ஸ்தாபன ரீதியாக கருப்புக் கொடி காட்ட முடிவு எடுத்து, முன் அறிவிப்புக் கொடுத்திருந்தார்களா ?

மாண்புமிகு திரு. மு. கருணநிதி : ஸ்தாபன ரீதியாக முடிவு எடுக்கவில்லை. காங்கிரஸ் தலைவர்களேகூட ஸ்தாபன ரீதியாக முடிவு எடுக்கப்பட்டதல்ல என்று அறிக்கை கொடுத்திருக்கிருர்கள். ஸ்தாபனத்திற்கே அவர்கள் கட்டுப்படாதிருக்கிறபோது அரசாங்கத்திற்கு எப்படி முன் அறிவிப்புக் கொடுப்பார்கள் ?

Indian Institute of Public Administration

* 385 *Q.*—Thiru N. S. V. CHITHAN : Will the Hon. the Chief Minister be pleased to state—

(*a*) whether any grant has been made by the Government to the Indian Institute of Public Administration, Madras, in 1968 for conducting seminars ; and

(b) if so, the details thereof ?

மாண்புமிகு திரு. மு. கருணநிதி:

(அ) ஆம்.

(இ) 1968 ஆகஸ்ட் 9, 10-ம் நாட்களில் சென்னையில் நடைபெற்ற இம்மாநில இளநிலை அதிகாரிகளுக்கான ஒரு கருத்தரங்கு குறித்து ஆகும் செலவைச் சரிக்கட்ட பொது நிர்வாகம் குறித்த இந்திய நிறுவனத்தின் தமிழ்நாட்டு வட்டாரக் கிளைக்கு ரூ. 2,500 மானியம் வழங்கப்பட்டுள்ளது.

திரு. கே. விஞயகம் : இண்டியன் இன்ஸ்டிட்யூட் ஆப் பப்ளிக் அட்மினிஸ்ட்ரேஷன் ஆற்றுகின்ற நல்ல பணிகள் எவை எவை என்று சொல்ல முடியுமா ?

மாண்புமிகு திரு. மு. கருணநிதி : இது சுயேச்சையான அரசியல் சார்பற்ற நிறுவனமாகும்.

பொது நிர்வாகத்தின் எல்லாப் பிரிவுகளைப் பற்றியும் பாடப் பயிற்சி வகுப்புகள் நடத்த வகை செய்து கொடுத்தல், மாநாடுகள் விவாதக் குழுக்களைக் கூட்டுதல், பொது நிர்வாகம் குறித்த ஆராய்ச்சியை மேற்கொள்ளுதல், பொது நிர்வாகம் பற்றிய வெளியீடுகள், ஆராய்ச்சிக் குறிப்புகள், நூல்கள் வெளியிடுதல், கருத்துக்களையும், அனுபவங்களையும் பரிமாறிக் கொள்ளும் ஒரு அரங்கமாக அமைதல், பொதுவாக பொது நிர்வாகம் பற்றியத் தகவல்களை வெளியிடும் ஒரு நிலையமாகச் செயல்படுதல்.

Family cards system

* 386 *Q.*—Thiru K. VINAYAKAM : Will the Hon. the Minister for Food and Agriculture be pleased to state whether the Hon. Minister is aware of the fact that for many months the card holders of Tirunagar, Madurai City did not get rice supply?